# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

## தமிழ்க் குழு வினா - விடைப் போட்டியின் விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும்.
2. இப்போட்டியில் 8-18 வயதிற்குற்பட்டவர்கள் ஐந்து போட்டியாளர்களைக் கொண்ட குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.
3. கேட்கப்படும் கேள்விகள் தமிழ் மொழி, மற்றும் கலாசாரம் சம்பந்தப்பட்டதாக இருக்கும். சில வரலாறு தொடர்பான கேள்விகளும், பொது கேள்விகளும் கேட்கப்படும்.
4. வினா கேட்கப்பட்ட போட்டியாளர் மற்றவர்களுடன் **கலந்தாலோசிக்காது**, அந்த வினாவிற்கான சரியான பதிலை அளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். அவர் பிழையாகப் பதிலளித்தாலோ அல்லது தனக்குக் கொடுக்கப்பட்ட 30 வினாடிகளுக்குள் பதிலளிக்காத சந்தர்ப்பத்தில், அந்தக் குழுவிவைச் சேர்ந்த வேறு யாவராவது தம்மிடையே **கலந்தாலோசித்தபின்** சரியான பதிலளித்தால் 3 புள்ளிகளும் வழங்கப்படும். கேட்கப்பட்ட குழு பதிலளிக்கத்தவறும் பட்சத்தில் எதிர் அணியினிடம் அந்த வினா கேட்கப்படும். எதிர் அணியினர் தம்மிடையே **கலந்தாலோசித்தபின்** யாராவது ஒருவர் அந்த வினாவிற்கு பதிலளிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 30 வினாடிகள் கொடுக்கப்படும். பிழையான விடைகளுக்கு புள்ளிகள் ஏதும் கழிக்கப்படமாட்டாது.
5. வினாக்கள் மாறிமாறி இரு குழுக்களிடையேயும் கேட்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் கேள்விகள் முதலாம் போட்டியாளரிலிருந்து இறுதிப் போட்டியாளர் வரை கேட்கப்படும்.
6. விடைகளை தெளிவான உச்சரிப்புடன் வழங்கவேண்டும்.
7. போட்டிகள் இரண்டு சுற்றுகளாக நடைபெறும். இரண்டாவது சுற்றின் பின் கூடிய புள்ளிகளைப் பெறும் அணி வெற்றி பெறும். அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி, இறுதிப் போட்டிக்கு தெரிவாகும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி முதற்பரிசையும், இரண்டாவதாக வரும் அணி ஆறுதல் பரிசையும் பெறும்.
8. இறுதிச் சுற்றில் இரு அணிகளும் ஒரேயளவு புள்ளிகளைப் பெறுமிடத்து மூன்றாம் சுற்று நாடாத்த வேண்டிய தேவை ஏற்படலாம். மூன்றாம் சுற்றில் ஒவ்வொரு கேள்வியும் குழுநிலையில் விடை சொல்ல அனுமதியளிக்கப்படும். குழுவின் தலைவர் மற்ற குழு அங்கத்தவர்களிடம் கலந்துரையாடியபின், 30 வினாடிகளுக்குள் தமது விடையை தெரிவிக்க வேண்டும். அவர்கள் சரியான விடையை அளிக்கத் தவறும் பட்சத்தில், எதிர் அணியினரிடம் அந்த வினா கேட்கப்படும். அதற்கான விடையை எதிரணியும் குழு நிலையில் ஆலோசித்தபின் குழுவில் ஒருவர் இந்த வினாவிற்கான விடையை அளிக்கலாம்.

9. **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**
   - நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், போட்டிகளின் நேர அட்டவணையையும் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். உங்கள் விண்ணப்பம் முழுமை பெறாவிட்டால் எம்முடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும். நீங்கள் எங்களுடன் 10/07/06ற்கு முன்னர் தொடர்பு கொள்ளாதபட்சத்தில், நீங்கள் போட்டியில் தோற்றும் தகுதியை இழக்கின்றீர்கள். உங்கள் மின்னஞ்சல் விபரத்தை ஏற்கனவே தராவிடின், தயவு செய்து அனுப்பி விடவும்.
   - போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
   - விண்ணப்பக் கட்டணத்தை($5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தை குறைக்கவும்.
   - மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும் அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

## தமிழ் ஊக்குவிப்புப் குழு
## அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்

மேலதிக விபரங்களுக்கு: Email: tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
Tele: 0433 088 725 or 02-9758 7970